**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண்.77/2007**

**2025 ம் ஆண்டு செப்டம்பர்-9 ம் நாள் செவ்வாய்கிழமை**

பெயர் : குபேரன்

சாட்சி : PW1

தந்தை பெயர் : ராமானுஜம்

நேரம் : 12.30 P.M to 12.50 P.M

**கடந்த 01.09.2025 தேதி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

11. 66 செண்ட் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியின் மூதாதையர்களுக்கு 66 செண்ட் பாத்தியப்பட்டதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தான் பயிர் செய்து வருகிறேன் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தான் பயிர் வைத்து வருகிறேன். 66 செண்ட் எந்த சர்வே எண், பட்டா எண் என்று எதிர் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. குப்புசாமி நாயுடுவுக்கும் அவரது பங்காளிகளுக்கும் எப்போது பாகம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. குப்புசாமி நாயுடுக்கு எப்போது பாகம் பிரிவினை ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது, குப்புசாமி நாயுடுக்கு 22 செண்ட் கொடுக்கப்பட்டதாக சொல்வதற்கு நான் எந்த ஆவணமும் பார்க்கவில்லை. குப்புசாமி நாயுடு 22 செண்டை அனுபவித்து வந்தார் என்பதற்கான ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. 22 செண்டை குப்புசாமி நாயுடு அனுபவித்ததற்கு அதனுடைய பட்டா எண், சர்வே எண், செக்குபந்தி எனக்கு தெரியாது.

12. நான் 44 செண்டை குப்புசாமி நாயுடுவின் பங்காளிகள் அனுபவித்ததற்கு அதனுடைய பட்டா எண், சர்வே எண், செக்குபந்தி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் குப்புசாமிக்கோ, அவருடைய மூதாதையர்களுக்கோ எந்தவொரு உரிமையும் இல்லை என்றாலும் அனுபவத்தில் அவர்கள் எந்த காலத்திலும் இல்லை என்றாலும் சரியல்ல. அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள். குப்புசாமி அனுபவத்தில் இருப்பதாக கூறுவது பொய் என்று கூறுவது சரியல்ல. நான் தாக்கல்

செய்த பிவாசாஆ 2 மற்றும் 3 வழக்கு சொத்திற்குரியது அல்ல என்றாலும் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பெறப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. பிவாசாஆ.4 முதல் 10 வரை உள்ள தீர்வை ரசீதுகள் வழக்கு சொத்திற்குண்டான ரசீதுகள் அல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ.11 குப்புசாமி நாயுடு பேரில் வழங்கப்பட்ட பட்டா இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது பெறப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. எதிர்வழக்குரையுடன் நான் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் உள்ள அம்சங்கள் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியல் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரியாகாத்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னுடைய எதிர் வழக்குரையிலும் மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ள அம்சங்கள் தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை வாதியின் மூதாதையர்கள் அனுபவித்து வந்து வாதியின் தகப்பனார் காலம் சென்ற பிறகு வாதி அனுபவித்து வருகிறார் என்றாலும் வாசாஆ 1ன் படி வாதி க்கு மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதியின் உரிமையை மறுக்கவோ தொந்தரவு செய்யவோ எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் எந்த காலத்திலும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்து டன் முடிக்கப்பட்டது.**